**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 30/2024 - PW-13**

| | |
|---|---|
| Name | திரு.பிரபாகரன் |
| Husband/Father Name | ராமு |
| Village /Area | சோளிங்கர் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | உதவி ஆய்வாளர் |
| Age | 33 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 05.03.2026.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கொண்டபாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் 2019ம் ஆண்டு கொண்டபாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 23.07.2019 அன்று பகல் 15.30 மணிக்கு நிலையப் பொறுப்பிலிருந்த போது வாலாஜா தாலுக்கா காட்ரம்பாக்கம் கிராமம் நடுத்தெருவை சேர்ந்த ஜகநாதன் என்பவரின் மனைவி ருக்மணி என்பவர் நிலையம் சேர்ந்து அளித்த புகார் மனுவில் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.285/2019 U/s.302 IPC கீழ் வழக்கு பதிவு செய்து அன்றைய தினமே மேல் நடவடிக்கைகாக சோளிங்கர் வட்ட ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்துவிட்டேன் மேலும் முதல் தகவல் அறிக்கையை உரிய நீதிமன்றத்துக்கு அன்றைய தினமே அனுப்பி வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். புகாரின் உண்மை தன்மையை பற்றி நான் ஆராய்ச்சி செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

நான் பொய்யான புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மேல் அதிகாரியின்

அழுத்தத்தின் காரணமாக முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

வழக்கறிஞர் யாரும் ஆஜராகததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.05 18:26:55 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.